03.02.2026.

EA.05/2026 in EP.37/2024 in O.S.No. 33/2007

PW2- பாலமணிகண்டன் – த/பெ.தங்கபாண்டி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 03.02.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( எதிர்மனுதாரர் தரப்பில்)

1. அசல் வழக்கில் என் தகப்பனாருக்கு எதிராக தீர்ப்பு வழங்கிய விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

2. அசல் வழக்கில் அம்பை நீதிமன்றத்தில் நியமிக்கப்பட்ட நீதிமன்ற ஆணையர் ஸ்தல பார்வையிட்டு தாவா 5 ம் தபசில் 11 லிங்ஸ் பாதையை அடையாளம் கண்டார் என்றால் சரிதான்.

3. அந்த பாதையை எந்த சர்வே எண்ணில் உள்ளது என்பதை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

4. என் அப்பாவிற்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் பேரில் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான்.

5. தீர்ப்பின் படி 5ம் தபசில் சொத்தில் ஆசைத்தம்பி அனுபவம் செய்வதை நானோ, என் தகப்பனாரோ இடையூறு செய்யக்கூடாது என்றால் சரிதான்.

6. என் கட்டிடத்திற்கு நான் கட்டிட வரைபட அனுமதி பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அந்த அனுமதியில் என் கட்டிடத்தின் தென்வடல் விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. அம்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கின் நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் 2.2 மீட்டர் அளவில் சர்வே எண்.382/6ல் பாதை உள்ளது என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. சர்வே எண்.382/6ன் பாதை அளவு தற்போது 1.4 மீட்டர் உள்ளது என்றால் பாதை குறைவாக உள்ளது. 2 சர்வே எண்ணில் பாதை உள்ளது. அசல் வழக்கில் 2 சர்வே எண்ணில் பாதை இருப்பதாக குறிப்பிடவில்லை என்றும் சர்வே எண்.382/6ல் மட்டுமே 2.2 மீட்டர் அகலத்தில் பாதை உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9. இந்த வழக்கில் என் தகப்பனார் சாட்சியம் அளித்த விவரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான்.

10. என்னிடம் காட்டப்படுவது எ.ம.சா.ஆ.2- 1வது புகைப்படத்தில் உள்ள மின்கம்பம் தான் என் நிரூபண வாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டுள்ள மின் கம்பம் என்றால் சரியல்ல அது சுவருக்கு மேல்புறம் பாதையில் இருந்தது.

11. ஏன் அந்த மின் கம்பங்கள் அகற்றப்பட்டது என்றால் பாதையில் உள்ள மற்ற மின் கம்பங்களுக்கு சாய்வாக மின் ஒயர் செல்வதால் அந்த மின் கம்பங்கள் அகற்றப்பட்டது. நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும் ஆணையர் கூறிய மின்கம்பம் தான் எ.ம.சா.ஆ.2- 1வது புகைப்படத்தில் உள்ள மின்கம்பம் என்றால் சரியல்ல.

12. அசல் வழக்கில் 5ம் தபசில் சொத்தில் ஏதேனும் கட்டுமானங்கள் கட்டியிருந்தால் அதை அப்புறப்படுத்த தயாராக இருக்கிறீர்களா என்றால் தயாராக உள்ளேன்.

13. செல்வின்ராஜ் மற்றும் அவரின் சொத்திற்கான ஆவணங்களை நான் படித்து பார்த்துள்ளேன் என்றால் இல்லை.

14. தற்போது நீதிமன்ற ஆணையர் 2 சர்வே எண்ணில் பாதை இருப்பதாக குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல.

15. வழக்கிற்கு பின்னிட்டு ஸ்தல மாற்றத்திற்கும், புல எண் மாற்றத்திற்கும் நீதிமன்ற தீர்ப்பு கட்டுப்படாது என்றும் அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் படி 5ம் தபசில் சொத்தில் உள்ள கட்டுமானத்தை அகற்ற சட்டப்படி கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல.

16. முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறானவை என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>

இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி